உலக வரலாற்றில் முதன்முறையாக e-mail இல் வெளிவரும் இதழ்

www.aanmeegamalar.com வெளியிடும்

e-magazine

# ஆன்மிகமலர் மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மலர்-8 இதழ்-194

ஜூலை 1-16 2026

தீய சக்திகளை அண்ட விடாமல் தடுக்கும் வழிபாடு

e-magazine



e-magazine

## மகாலட்சுமி வழிபட்ட சிவபெருமான்

## இரண்டு நாய்களுடன் காட்சி தரும் பைரவர்

# திரு நோக்கிய அழகியநாதர்

# செல்வத்தைவிட உயர்ந்த உடல்நலத்தை தரும்

# சித்தர்கள் வாழும் பழநி மலை

பதினெண்சித்தர்கள் அவதரிப்பதற்கு முன்னால் நவநாத சித்தர்களே இருந்தனர். இவர்கள் இமயத்தில் வாழ்ந்தனர். காலாங்கி நாதரைத் தேடி அங்கு சென்ற போகர், அவரைத் தம் குருவாக ஏற்றுக் கொண்டார்.




பழநியில் முருகன் விற்றிருந்ததால், பல சித்தர்களின் சித்துகளால் மிகுந்த நன்மை அடைந்த இடமாக திகழ்ந்ததாலும், பழனி முருக னால் தான் ஈர்க்கப்பட்டதாலும், பழநிமலையை தனக்குரிய உறைவிடமாக மாற்றிக் கொண்டார் போகர்.

உடலுக்கு உறுதி தரும் பல மருந்துகளையும், அவற்றிற்கு ஆதார மான நூல்களையும் இந்தச் சித்தர்கள் உருவாக்கி மக்களுக்கு நன்மை செய்து வந்தனர். aanmeegamalar.com


இதை மெய்ப்பிக்கும் வகையில் அருணகிரிநாத ரும் தான் எழுதிய சித்து வகுப்பில் எண்ணற்ற தாவரங்கள், மூலி கைகள், பச்சிலைகள் இவை பற்றி முருகன் தனக்கு உபதேசித்ததை மிக விவரமாகப் பாடியுள்ளார். ஆன்மிகமலர்

இவர்களுக்கெல்லாம் மேற்பட்டு, மக்கள் உடற்பிணியும் உயிர்ப்பிணியும் நீங்கி முக்தி நிலையை அடைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் ஒப்பற்ற பழநி ஆண்டியின் திருவுருவத்தைப் பேராற்ற லுடன் நவபாஷாணத் திருமேனியாக நிலைபெறச் செய்தருளினார் போகர்.

நீண்ட தவத்திற்குப் பிறகு, வான மார்க்கமாக சீன தேசம் சென்ற போகர், அங்கிருந்த வண் ணம் எண்ணற்ற நூல்களை எழுதினார் என்றும், பல்வேறு மூலிகைகளைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தார் என்ற செய்திகளும் கூறுகின் றன. அவருக்குத் தெரியாத வித்தைகளே இல்லை எண்ணுமள விற்கு அஷ்டமாசித்திகளும் கைவரப்பெற்றிருந்தார் போகர். aanmeegamalar.com

பழனி மலை செல்வத்தை மட்டுமல்ல சித்தர்களின் ஆசியால், செல்வத்தைவிட உயரிய, உடல் நலத்தையும் தரும் பீடமாகவே திகழ்கிறது.

இதனல்தான், கோடானு கோடி செல்வங்களைத் தன் காலடியில் வந்து கொட்டிய போதும், தனக்கென்று ஒரு கௌபீனமும், தண்டமும் மட்டுமே கொண்டு நிற்கும் முருகப்பெருமானைக் காண பக்தர்கள் லட்சக்கணக்கில் மலை ஏறிவருகின்றதே இதற்குச் சான்று.



e-magazine
aanmeegamalar.com

e-magazine
aanmeegamalar.com

# அனைத்து நன்மையை தரும் அனுமன் மந்திரங்கள்

ஆஞ்சநேயரின் பெருமைகளைப் போற்றும் மேலும் சில முக்கியமான துதிகள்.

### ஆஞ்சநேயர் காயத்ரி மந்திரம்

“ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே
வாயுபுத்ராய தீமஹி |
தன்னோ ஹனுமந் ப்ரசோதயாத் ||”.

பொருள்:

ஆஞ்சநேயரை நான் அறிகிறேன்; வாயு புத்தி ரனை நான் தியானிக்கிறேன்; அந்த அனுமன் நம் அறிவை ஒளிரச் செய்து, நம்மை நல்வழியில் வழி நடத்தட்டும். aanmeegamalar.com

### அனுமத் கவசம் (தொடக்க வரிகள்)

“ஓம் ஸ்ரீ ஹனுமான் அஞ்சனா ஸுத
ஹனுமான் வாயு புத்ரா ஹனுமான் |
மஹாபல ஹனுமான்
ஸ்ரீ ராம தூத ஹனுமான்||”

பொருள்:

அஞ்சனையின் மைந்தனே, வாயுவின் புத்திரனே, மகா பலசாலியே, ஸ்ரீ ராமனின் தூதனே, உன்னைத் துதிக்கிறேன். aanmeegamalar.com

### ஆஞ்சநேயரை அவரது பல்வேறு வடிவங்களில் போற்றும் ஒரு துதி. (துயரம் நீங்க)

“புத்திர் பலம் யசோ தைர்யம்
நிர்பயத்வ மரோகதா |




அஜாட்யம் வாக்படுத்வம் ச ஹனுமத்
ஸ்மரணாத் பவேத்||”.

பொருள்: aanmeegamalar.com

ஆஞ்சநேயரை நினைப்பதன் மூலம் புத்தி (அறிவு), பலம், புகழ், தைரியம், பயமின்மை, ஆரோக்கியம், சுறுசுறுப்பு மற்றும் வாக்கு சாதுரியம் ஆகிய அனைத்தையும் அடையலாம்.

### ஸ்ரீ ராம ஜெய மந்திரம் (ஆஞ்சநேயருக்கு மிகவும் பிடித்தது).

“ஸ்ரீ ராம, ஜெய ராம,
ஜெய ஜெய ராம”

பொருள்:. aanmeegamalar.com

இது ஸ்ரீ ராமனின் வெற்றியைப் பாடும் மந்திரம். எங்கு இந்த மந்திரம் ஒலிக்கிறதோ, அங்கு ஆஞ்சநேயர் அருள்பாலிப்பார் என்பது ஐதீகம்.

இந்த ஸ்லோகங்களை தினமும் பாராயணம் செய் வது மனதிற்கு அமைதியையும், காரியங்களில் வெற்றிக்கான நம்பிக்கையையும் தரும்.

## ஸர்வ கல்யாண தாதாரம்...

அனைத்து நன்மைகளையும் வழங்குபவரும், சகல ஆபத்துகளையும் போக்குபவருமான, எல்லையற்ற கருணை வடிவான அந்த ஆஞ்சநேயரை நான் வணங்குகிறேன்.

aanmeegamalar.com

## அஞ்ஜநா நந்தனம் வீரம்...

அஞ்சனையின் மைந்தனும், வீரருமான ஆஞ்ச நேயரே! சீதையின் துயரத்தைப் போக் கியவரே, வானரர்களுக்குத் தலைவரே, அக்ஷய குமாரனை வதம் செய்தவரே, லங்கைக்கு அச்சத் தைத் தந்தவரே, உங்களை வணங்குகிறேன்.

## ஆஞ்சநேயமதி பாடலாநநம்...

குரங்கு முகத்தை உடையவரும், பொன்மலை போன்ற அழகான திருமேனியைப் பெற்றவரும், பாரிஜாத மரத்தின் அடியில் வசிப்பவருமான வாயு புத்திரனை (ஆஞ்சநேயரை) என் மனதால் தியானிக்கிறேன்.

## யத்ர யத்ர ரகு நாத கீர்த்தனம்...

ஸ்ரீ ராமனின் புகழ் பாடப்படும் இடங்களிலெல்லாம், ஆஞ்சநேயர் தலை வணங்கி, கண்களில் ஆனந்தக் கண்ணீருடன் அங்கு அமர்ந்திருப்பார். அத்தகைய அரக்கர்களை அழித்த அந்த மாருதியை வணங்குகிறேன்.

aanmeegamalar.com

## மனோஜவம் மாருத துல்ய வேகம்..

மனதைப் போல வேகமானவரும், காற்றைப் போல அதிவேகமாகச் செல்பவரும், ஐம்புலன்களையும் வென்றவரும், அறிவாளிகளுள் சிறந்தவரும், வாயுவின் மைந்தனும், வானரக் கூட்டத்திற்குத் தலைவரும், ஸ்ரீ ராமனின் தூதருமான ஆஞ்சநேயரை சிரந்தாழ்ந்து வணங்குகிறேன்.

# தீய சக்திகளை அண்டவிடாமல் தடுக்கும் வழிபாடு

aanmeegamalar.com




நரசிம்மர் தனது பக்தர்களைக் காக்க உக்கிரமான வடிவத்தை எடுத்தவர். செவ்வாய்க்கிழமை அல்லது சுவாதி நட்சத்திர நாளில் நரசிம்மருக்கு பானகம் நிவேதனம் செய்து வழிபடுவது, எதிரிகளின் தடைகளை உடைத்து வெற்றியைத் தரும் என்று நம்பப்படுகிறது.

aanmeegamalar.com

### கணபதி வழிபாடு

(சங்கடஹர சதுர்த்தி):

எந்த ஒரு காரியத்தைத் தொடங்குவதற்கு முன்பும் தடைகளை நீக்கும் விக்னேஸ் வரனை வழிபடுவது சிறப்பு.

சங்கடஹர சதுர்த்தி அன்று அருகம்புல் கொண்டு விநாயகருக்கு அர்ச்சனை செய்வது, எதிர்பாராத சிக்கல்கள் மற்றும் மறைமுகத் தடைகளை நீக்க உதவும்.

aanmeegamalar.com

### பஞ்சமுக ஆஞ்சநேயர் வழிபாடு:

ஆஞ்சநேயரின் ஐந்து முக வடிவங்களை வழிபடுவது மிகவும் சக்தி வாய்ந்தது.

இது திசைகள் மற்றும் கிரகங்களினால் ஏற்படும் தீய பாதிப்புகளை நீக்கி, பாதுகாப்பளிக்கும்.



e-magazine
aanmeegamalar.com

# திருவோண

## விரத சிறப்புகள்




திருவோணம் என்பது **ஸ்ரீமன் நாராயணன் திருநட்சத்திரம்.**

aanmeegamalar.com

திருவோண நட்சத்திர தினத்தன்று ஸ்ரீமன் நாராயணனை மனதார நினைத்து ஜபிக்கும் ஒவ்வொரு நொடியும் புண்ணியமாகும்.

விரதம் என்பது உணவைத் தவிர்ப்பது மட்டும் அல்ல... மனதை பகவானின் திருவடிகளில் நிலைநிறுத்தும் ஒரு தெய்வீக சாதனை...

aanmeegamalar.com

திருவோண நாளில் பகவத் நாமஸ்மரணம், திவ்யப் **பிரபந்த சேவை, தர்மம், தானம்** ஆகியவை பல மடங்கு பலனை அளிக்கும்...

திருவோண நட்சத்திர தினத்தன்று ஒரு முறை **"ஓம் நமோ நாராயணாய"** என்று மனமுருகி ஜபியுங்கள்... அந்த நாமமே வாழ்க்கைக்கு தைரியத்தையும் சாந்தியையும் அளிக்கும்...

திருவோண விரதத்தை பக்தியுடன் அனுஷ்டிக்கும் இல்லங்களில்... பகவத் அனுக்ரஹமும், மங்களமும், கைங்கர்ய பாக்கியமும் என்றும் நிலைத்திருக்கும்...

## ஓம் நமோ நாராயணாய

நாராயண நாமமே நமக்கு ஆதாரமும், ஆதரவும், ஆறுதலும்!

**ஸ்ரீமன் நாராயணன் திருவருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும்!**

# மனதிற்கு அமைதி தரும் கற்பூர கௌரம்

சிவபெருமானைப் போற்றும் மிகவும் புகழ்பெற்ற 'கற்பூர கௌரம்' ஸ்லோகம்.

இதன் முழு வடிவம் மற்றும் பொருள்.

**கற்பூர ஸ்லோகம்**

**கற்பூர கௌரம் கருணாவதாரம்**
**சம்ஸார சாரம் புஜகேந்திர ஹாரம்**
**ஸதா வசந்தம் ஹ்ருதயாரவிந்தே**
**பவம் பவானி ஸஹிதம் நமாமி**

ஸ்லோகத்தின் பொருள்:

கற்பூர கௌரம்: கற்பூரம் போன்ற வெண்மையான நிறம் கொண்டவரே.

கருணாவதாரம்: கருணையின் வடிவமாகத் திகழ்பவரே.

சம்ஸார சாரம்: உலக வாழ்வின் சாரமாக இருப்பவரே.

புஜகேந்திர ஹாரம்: பாம்புகளை ஆபரணமாக அணிந்தவரே.

ஸதா வசந்தம் ஹ்ருதயாரவிந்தே: எப்போதும் என் இதயத் தாமரையில் வீற்றிருப்பவரே.

பவம் பவானி ஸஹிதம் நமாமி:

பவானியுடன் (பார்வதி தேவியுடன்) கூடிய சிவபெருமானை நான் வணங்குகிறேன்.

இந்த ஸ்லோகம் சிவபெருமானின் அமைதியையும், கருணையையும், தூய்மையையும் போற்றிப் பாடும் மிக அழகான பிரார்த்தனை ஆகும். இதைத் தினமும் பாராயணம் செய்வது மனதிற்கு அமைதியைத் தரும்.

இந்த ஸ்லோகத்தின் சிறப்புகள்.

யஜுர்வேத மந்திரம்: aanmeegamalar.com

இது யஜுர்வேதத்தில் உள்ள 'சிவ சதா சிவ ஸ்தோத்திரம்' என்ற பகுதியிலிருந்து எடுக்கப் பட்டது.

சிவபெருமானுக்கு ஆரத்தி எடுக்கும்போது இந்த ஸ்லோகம் தவறாமல் பாடப்படும்.

இது ஒருவரின் மனதை ஒருமுகப் படுத்தவும், தீய எண்ணங்களை நீக்கி நேர்மறை ஆற்றலை உரு வாக்கவும் வல்லது.



e-magazine
aanmeegamalar.com

உங்கள் **பகுதியில்**
உள்ள கோவில்
கும்பாபிஷேகம்,
சிறப்பு விழாக்கள்,
போன்றவற்றை

# tabloid
# வடிவில்

4, 8, 12, 16 பக்கங்களில்

இதுபோன்ற
## சிறப்பு மலராக
வெளியிட தொடர்பு
கொள்ளவும்

தரமாகவும்,
சிறப்பாகவும் செய்து
தருகிறோம்...!




**தொடர்புக்கு கொள்ளவும்**

## அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
9994323622
9444228203

தங்கள் கோவில்களின் ஆன்மிக நிகழ்வுகளை
ஆயிரக்கணக்கான பக்தர்களிடம் கொண்டு சேர்ப்போம்!




# மனித மனதில் இருக்கும் மிருக குணத்தை செம்மைபடுத்தும்

# மிருக முக கடவுள்கள்

இந்து மதத்தில் பெரும்பாலான கடவுள்கள் மிருக முகத்துடன் காட்சியளிப்பதை பார்த்திருப்போம், அதற்கு காரணம் இல்லாமல் இல்லை...

மனிதர்களாகிய நமக்குள்ளும் பல மிருகக் குணங்கள் மறைந்துள்ளன. பேராசை, எல்லை கடந்த கோபம், தந்திரம், சோம்பல், பயம் போன்றவை யாவும் மிருக இயல்புகளே.

சித்தர்கள் இந்த மிருக முகங்களை “நம் ஆழ் மனதில் இருக்கும் தீய குணங்களின் குறியீடாக” பார்த்தார்கள்.

aanmeegamalar.com


அந்தந்த மிருக முகத்தைக் கொண்ட யோகினியை நாம் தியானிக்கும்போது, நமக்குள்ளே இருக்கும் அந்த குறிப்பிட்ட மிருகக்குணம் அழியத் தொடங்கும்.

உதாரணமாக, பன்றி முகமுடைய வாராஹியை வணங்கும்போது பேராசையும், சிங்க முகமுடைய நரசிம்ஹியை வணங்கும்போது கோபம் மறைந்து மனம் சாந்தமடையும்.

பொதுவாக, மிருகங்களும் பறவைகளும் இயற்கையோடு மிக நெருக்கமாக வாழ்பவை. அவற்றிடம் இருக்கும் சில அசாத்தியமான திறன்களான, கூர்மையான பார்வை, கேட்கும் திறன், மோப்ப சக்தி, வேகம், ஆகியவற்றை மனிதன் இழந்துவிட்டான்.

இதை மீட்கத்தான் சித்தர்கள் யோகினி வழி பாட்டை அறிமுகப்படுத்தினர்.





யோகினி வழிபாட்டில் இந்த மிருக முகங்கள் என்பது “இயற்கையின் அசுரத்தனமான, தூய்மை யான பேராற்றலைக்“ குறிக்கிறது.

இயற்கையை அடக்க நினைக்காமல், அதோடு ஒன்றி வாழும் மாபெரும் தத்துவத்தை இந்த வடி வங்கள் நமக்கு உணர்த்துகின்றன.

சித்தர்கள் அகக் கண்ணால் இந்த வடிவங்களின் உண்மையான ஆற்றலை உணர்ந்தவர்கள்.

என் தோற்றம் எப்படி இருந்தாலும், எனக்குள் இருக்கும் ஆன்ம ஆற்றல் சிம்மாசனத்தில் அமரத் தகுதியானது. என்ற உயரிய தத்துவத்தை, இந்த விசித்திர முகங்கள் கொண்ட யோகினிகள் கற்றுத் தருகிறார்கள். aanmeegamalar.com

மனமது செம்மையானால்... என்ற வாக்கிற்கு ஏற்ப, மனிதன் தன் வெளித்தோற்றத்தை மட் டும் அழகாக்கிக் கொள்ளாமல், மனதிற்குள் இருக் கும் மிருகத்தனத்தை ஆன்மீக ஞானத்தால் செம் மைப் படுத்த வேண்டும் என்பதே இதன் ஆதி ரகசியம்!

எனவே, இந்த வடிவங்களைக் கண்டு அச்சப்படத் தேவையில்லை. அவர்கள் நமக்குள்ளே இருக்கும் மிருகத்தனத்தை ஞானமாக மாற்றக் காத்திருக்கும் பேரொளிகள்!






## இமயமலை சிவாலய யாத்திரையை முழுமையாக்கும்

# டோலேஷ்வர் ஆலயம்


மகாபாரதப் போருக்குப் பின், பாண்டவர்கள் தங்கள் உறவினர்களைக் கொன்ற பாவத்தைப் போக்கிக் கொள்ளவும், கோத்ர ஹத்தி தோஷத்தை தீர்த்துக் கொள்ளவும், சிவபெருமானைத் தேடி இமயமலைக்கு யாத்திரை சென்றனர். ஆனால், மகாபாரதப் போரின் குருதி சிந்திய நிகழ்வுகளால் பாண்டவர்கள் மேல் கோபமாக இருந்த சிவன், அவர்களுக்குக் காட்சி தர விரும்பாமல் ஒரு காளை வடிவமெடுத்து பூமியில் மறைய முற்பட்டார்.

அது சாதாரண காளை அல்ல, சிவபெருமான் தான் என்பதை உணர்ந்த பீமன், அதை பலமாகப் பிடித்தார். பீமன் பிடித்த பிடியின் வேகத்தில், காளையின் உடல் பகுதிகள் பூமியின் பல்வேறு இடங்களில் வெளிப்பட்டன.

aanmeegamalar.com

காளையின் உடல் பகுதியான திமில் இந்தியாவின் கேதார்நாத் தளத்தில் தங்கியது. இதுவே பஞ்ச கேதாரங்களில் முதன்மையானது.

அந்த காளையின் தலைப் பகுதி வெளிப்பட்ட இடமே நேபாளத்தில் உள்ள டோலேஷ்வர் மகாதேவ்






தலம் என்று சிவபுராணத்தின் கூறப்படுகிறது.

4000 ஆண்டுகளுக்கும் மேலாக ரகசியமாக இருந்த இந்த ஆன்மீக உண்மை, 2009 ஆகஸ்ட் 22 அன்று கேதார்நாத் பீடத்தின் தலைமைப் பூசாரியான ஸ்ரீ 1008 ஜகத்குரு பீமாசங்கர்லிங்க சிவாச்சார்யாரால் அதிகாரப்பூர்வமாக உறுதி செய்யப்பட்டு, டோலேஷ்வர் தான் கேதார்நாத்தின் "தலைப் பகுதி" என்று அறிவிக்கப்பட்டது.

இந்தக் கோவில், நேபாளத்தின் தலைநகரான காத்மாண்டுவில் இருந்து சுமார் 20 கி.மீ தொலைவில் உள்ள பக்தபூர் மாவட்டத்தின் சூரியவிநாயக் என்ற மலை அடிவாரப் பகுதியில் அமைந்துள்ளது.

aanmeegamalar.com

கேதார்நாத் கோவிலில் என்னென்ன ஆன் மீக வழிபாட்டு முறைகள், மந்திரங்கள் மற்றும் கால பூஜைகள் நடத்தப்படுகிறதோ, அதே முறைகள் தான் இங்கும் பின்பற்றப்படுகின்றன.

கேதார்நாத் கோவிலில் இருப்பது போன்றே, டோலேஷ்வர் ஆலயத்தில் இருக்கும் பூசாரிகளும் தென்னிந்திய மாநிலங்களான கர்நாடகா,ஆந்திரா, தமிழ்நாடு மற்றும் கேரளாவைச் சேர்ந்த வீரசைவ மரபைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள்.

2013ல் உத்தரகண்ட் கேதார்நாத்தில் மிகப் பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பூஜைகள் பாதிக்கப்பட்ட போது, கேதார்நாத்தின் தலைமைப் பூசாரியின் வழிகாட்டுதலின்படி, கேதார்நாத் மூலவருக்குச் செய்ய வேண்டிய முக்கியத் திருவாராதனங்களும் பூஜைகளும், நேபாளத்தில் உள்ள டோலேஷ்வர் கோவிலில் தான் தற்காலிக மாக நடத்தப்பட்டன.

இந்து தர்மத்தின்படி இந்தியாவின் கேதார்நாத் மற்றும் பத்ரிநாத் உள்ளிட்ட ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்பவர்கள், நேபாளத்தின் பசுபதிநாத் மற்றும் இந்த டோலேஷ்வர் ஆகிய இரண்டுதலங்களையும் தரிசித்தால் மட்டுமே அவர்களின் இமய மலை சிவயாத்திரை முழுமை பெறுகிறது என்று கூறப்படுகிறது. உடலும் தலையும் இணையும் போது தான் ஆன்மீகப் பலன் முழுமையடைகிறது.

பாண்டவர்களின் 'கோத்ர ஹத்தி' மற்றும் 'பிரம்மஹத்தி' போன்ற பெரிய தோஷங்களையே போக்கிய தலம் என்பதால், இங்கு வந்து மனமுருகிப் பிரார்த்தனை செய்யும் பக்தர்களின் அறியாமல் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கும். இயற்கை எழில் கொஞ்சும் அமைதியான மலைப் பகுதியில் அமைந்துள்ளதால், இந்தத் தலத்தின் தெய்வீக அதிர்வுகள் மன அழுத்தத்தைப் போக்கி, ஆழ்ந்த மன அமைதியையும், உடல் ஆரோக்கியத்தையும் தரும்.




# கங்கைகொண்ட சோழபுரம் கட்டுமான கணக்கை சொன்ன

# கணக்குப் பிள்ளையார்

வட இந்தியா வரை வெற்றிகரமாகப் படையெடுத்து, கங்கை நதியின் புனித நீரை சோழ நாட்டிற்கு கொண்டு வந்தார் ராஜேந்திர சோழன்.

அந்த மகத்தான வெற்றியை நிலைநிறுத்தும் விதமாக ஒரு புதிய தலைநகரை உருவாக்கினார்.

அதுவே கங்கைகொண்ட சோழபுரம்.

அங்கு தஞ்சைப் பெரிய கோவிலுக்கு இணையாக ஒரு பிரம்மாண்டமான சிவாலயத்தை எழுப்ப முடிவு செய்தார்.

aanmeegamalar.com

அந்த ஆலயமே இன்றைய கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோவில்.

எந்த ஒரு மங்களகரமான காரியத்தையும் தொடங்குவதற்கு முன் விநாயகரை வணங்குவது நம் பாரம்பரிய மரபு.

அதன்படி ஆலயத் திருப்பணிகள் தொடங் கும் முன்பே, அரண்மனைக்கு அருகில் விநாயகருக்கென்று ஒரு சிறப்பு ஆலயம் அமைக்கப்பட்டது.

அந்த விநாயகர் "கனக விநாயகர்" என்று அழைக்கப்பட்டார். அவரது திருவடியை வணங்கிய பின்னரே ஒவ்வொரு கட்டுமானப் பணியும் தொடங்கப்பட்டது.

ஆலயக் கட்டுமானப் பொறுப்பை ராஜேந்திர சோழன் தனது நம்பிக்கைக்குரிய அமைச்சரிடம் ஒப்படைத்தார். அமைச்சர் மிகுந்த பக்தியுடன்




பணியாற்றினார்.

ஒவ்வொரு நாளும் தொழிலாளர்களின் கூலி, கட்டுமானப் பொருட்களின் செலவு, பொன், வெள்ளி மற்றும் பிற நிதி அனைத்தையும் முதலில் விநாயகர் சன்னதியில் வைத்து வணங்குவார்.

பிறகே அந்த நாள் பணிகள் தொடங்கும்.

இவ்வாறு ஆண்டுகள் கடந்து சென்றன.

ஒரு நாள் அல்ல.

ஒரு மாதம் அல்ல.

முழு பதினாறு ஆண்டுகள்!

பதினாறு ஆண்டுகளின் கடுமையான உழைப் பிற்குப் பிறகு ஆலயம் பிரம்மாண்டமாக உயர்ந்து நின்றது.

aanmeegamalar.com

ஒருநாள் ராஜேந்திர சோழன் ஆலயப் பணி களை பார்வையிட வந்தார்.

கோவிலின் கம்பீரத்தைக் கண்டு மனம் மகிழ்ந்தார். ஆனால் திடீரென்று அமைச்சரை நோக்கி ஒரு கேள்வி கேட்டார்.

“இந்த ஆலயத்திற்கு இதுவரை எவ்வளவு செலவானது?” என்று.

அமைச்சர் அதிர்ந்து போனார்.

பதினாறு ஆண்டுகளாக கட்டுமானப்பணிகளில் முழுமையாக ஈடுபட்டிருந்ததால், ஒவ்வொரு செலவையும் தனித்தனியாக பதிவு செய்து வைத் திருக்கவில்லை.

மன்னர் மறுநாள் காலைக்குள் கணக்கைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டார்.

அன்று இரவு அமைச்சர் மனவேதனையுடன் கனக விநாயகர் சன்னதிக்குச் சென்றார்.

“இத்தனை ஆண்டுகள் உன் அருளால் இந்தப் பணி நடைபெற்றது. இப்போது இந்தச் சிக்கலிலிருந்தும் நீதான் காப்பாற்ற வேண்டும்.” என்று மனமுருகி வேண்டினார்.

அந்த இரவு ஒரு அதிசயம் நிகழ்ந்தது.

அமைச்சரின் கனவில் விநாயகர் தோன்றினார்.

அவரை நோக்கி: “கவலைப்படாதே. மன்னர் கேட்டால் ‘எட்டு நூல் எட்டு லட்சம் பொன்’ செல வானது என்று கூறு.” என்று அருள்வாக்கு வழங் கினார்.

காலை எழுந்த அமைச்சர் அதையே ஓலைச் சுவடியில் எழுதி வைத்தார். “எட்டு நூல்” என்ற ரகசியம்.

மறுநாள் மன்னரிடம் கணக்கு சமர்ப்பிக் கப்பட்டது. அதைப் பார்த்த ராஜேந்திர சோழன் ஆச்சரியமடைந்தார்.

“எப்படி இவ்வளவு துல்லியமாக கணக் கிட் டாய்?” என்று கேட்டார்.

அப்போது அமைச்சர் நடந்த அனைத்தையும் கூறினார்.

பழங்கால கட்டிடக் கலையில் “எட்டு நூல்” என்பது மிக முக்கியமான அளவீட்டு முறையாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

கட்டிடத்தின் நீளம், அகலம், உயரம், வளைவு, கட்டுமானப் பொருட்களின் பயன்பாடு போன்ற வற்றை கணக்கிட உதவும் அளவியல் அறிவின்




அடிப்படையில் மொத்த செலவையும் மதிப்பிட முடியும்.

விநாயகர் அதையே குறிப்பாக அருளியதாக பக்தர்கள் நம்புகின்றனர்.

அமைச்சரின் விளக்கத்தைக் கேட்ட மன்னர் வியந்தார்.

“இது மனித அறிவால் சாத்தியமில்லை. விநாயகர் அருளால் நிகழ்ந்த அதிசயம்.” என்று கூறினார்.

அதன்பிறகு அந்த விநாயகர் “கணக்குப் பிள்ளையார்” என்ற பெயரால் புகழ்பெற்றார்.

இன்றும் பக்தர்கள் அவரை அந்தப் பெயரிலேயே அழைத்து வணங்குகின்றனர்.

சிறிய வாசலின் பின்னால் இருக்கும் காரணம்

இந்த விநாயகர் சன்னதிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அதன் நுழைவாயில் மிகவும் குறுகலாக அமைக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பின்னால் ஒரு நம்பிக்கை சொல்லப் படுகிறது. aanmeegamalar.com

கோவில்களை சூறையாடி, தங்கள் மதத்தை பரப்பிய முகலாய படையெடுப்புகள் நிகழும் காலங்களில், இந்த அரிய மூர்த்தியை யாரும் எளிதாக அகற்றிச் செல்ல முடியாத வகையில் மன்னர் சிறிய நுழைவாயிலை அமைக்க உத்தர விட்டாராம்.

இதனால் காலத்தின் பல சோதனைகளைக் கடந்து இத்தலம் பாதுகாக்கப்பட்டதாக உள்ளூர் வரலாறுகள் கூறுகின்றன.

## எங்கு உள்ளது கணக்கு பிள்ளையார் கோவில்






பிரஹதீஸ்வரர் கோவிலுக்கு மேற்கே அரை கிலோமீட்டர் தொலைவில் இந்த கணக்குப் பிள்ளையார் கோவில் அமைந்துள்ளது. பிரஹதீஸ்வரர் கோவிலுக்கு செல்பவர்கள் அவசியம் இந்த விநாயகரை தரிசித்துவிட்டு வரவும்.

# தியானம்

## மன அமைதி அதிகரிக்கவும்

## தீய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும்

### உலக அளவில் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு

தியானங்களில் பல வகைகள் உண்டு. அவற்றில் பெரும்பாலானவை இந்தியாவின் யோகாவிலிருந்து உருவானவை. கௌதம புத்தர் தன் ஞானத் தேடலின் ஆரம்பத்தில் பல யோகிகளிடம் தியான முறைகளைக் கற்றிருந்தார். ஞானமடைந்த பின்னர் அவர் போதித்த தியான முறைகள் யோகாவையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. அவரது காலத்திற்குப் பின் அவருடைய சீடர்கள் அந்த தியான முறைகளில் பல ஆராய்ச்சிகள் செய்து, பல அனுபவங்கள் பெற்று மேலும் பல தியான முறைகளை உருவாக்கினார்கள். புத்த மதம் பரவிய பல நாடுகளில் தியான முறைகள் பல்வேறு வடிவம் எடுத்தன. ஜென் தியானம், திபெத்திய தியானம், தந்திரா தியானம், விபாசனா தியானம், போன்ற பல்வேறு தியானமுறைகளை புத்த மதம் உருவாக்கி வளர்த்தது.

aanmeegamalar.com

மேலை நாடுகளில் தியானம் ஆரம்பத்தில் ஆன்மிகப் பயிற்சியாகவே கருதப்பட்டது. ஆனால் தியானம் செய்பவர்கள் மன அமைதி பெறுவது மட்டுமல்லாமல் உடல் ரீதியாகவும், அறிவு ரீதியாகவும் கூட சிறந்த பலன்கள் அடைகிறார்கள் என்ற கருத்து வேகமாகப் பரவ ஆரம்பிக்கவே அறிவியல் அறிஞர்கள் தியானத்தை ஆராய்ச்சிக்கு உட்படுத்த முற்பட்டனர். பல ஆண்டுகளாக ஆராய்ச்சிகள் நடந்து அதன் முடிவுகள் வெளியாகி வருகின்றன என்ற போதும் சமீபத்திய ஆராய்ச்சிகள் சிலவற்றை மட்டும் பார்ப்போம்.

சில வருடங்களுக்கு முன் மசாச்சூட் மருத்துவப் பள்ளி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஜான் கபாட் ஜின்ன் (Jon Kabat-Zinn, Ph.D. University of Massachusetts Medical School) என்பவர், தியானம் பயிலுவதற்கு முன், தியானம் பயின்ற பின் நிலைகள் குறித்து ஆராய மன உளைச்சலால் அவதிப்படும் சில தொழிலாளர்களை எடுத்துக் கொண்டார். தியானம் பயிலும் முன் உள்ள அவர்களுடைய மூளை அலைகளையும், சுமார் எட்டு வாரங்கள் தியானப் பயிற்சி கழிந்து ஏற்படும் மூளை அலைகளையும், மேலும் நான்கு மாதங்கள் அவர்கள் தியானம் தொடர்ந்து செய்த பிறகு ஏற்படும்






மூளை அலைகளையும் ஆராய்ந்தார். தியானம் அவர்களை அமைதிப்படுத்துகிறது என்பதையும் அவர்கள் முன்பை விட அதிக மகிழ்ச்சி உடைய வர்களாய் இருக்கிறார்கள் என்பதையும் தன் ஆராய்ச்சியில் அவர் கண்டு பிடித்து இருக்கிறார்.

வேக் ஃபாரெஸ்ட் பல்கலைக்கழக மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த ஃபாடெல் செய்டான் (Fadel Zeidan, a researcher at Wake Forest University School of Medicine) என்பவர் 2010ல் செய்த ஆராய்ச்சி முடிவுகள் மருத்துவப் பத்திரிக்கைகளில் வெளி வந்துள்ளன. அவற்றில் அவர் தியானம் மனதை எளிதாக மாற்ற வல்லது என்பதையும், தொடர்ந்து தியானம் செய்பவர்கள் மன அமைதி அதிகம் பெறுவதோடு மட்டுமல்லாமல் தெளிவாக இருத்தல், புரிந்து கொள்ளல், கவனமாகவும் விழிப்புணர்வோடு இருத்தல் போன்றவற்றிலும் தியானம் செய்யாதவர்களைக் காட்டிலும் முன்னணி வகித்ததாகச் சொல்கிறார். குறிப்பிட்ட நேரத்திற்குள் செய்து முடிக்க வேண்டிய வேலைகள் தரப்பட்ட போது தியானம் செய்பவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் வேகமாகவும், சிறப்பாகவும் அலட்டிக் கொள்ளாமலும் செய்து முடித்ததைப் பதிவிட்டிருக்கிறார். aanmeegamalar.com

கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிளிஃபோர்டு சாரோன் (Clifford Saron) என்ற நரம்பியல் விஞ்ஞானி பல மில்லியன் டாலர்கள் செலவில் ஷாமந்தா ப்ராஜெக்ட் (The Shamatha Project) என்ற மிகப் பெரிய ஆராய்ச்சியை ஆரம்பித்துள்ளார். இந்த ஆராய்ச்சி மனம், உடல், நடவடிக்கைகள் இவற்றில் தியானம் ஏற்படுத்த முடிந்த மாற்றங்களை விரிவாக ஆராயும் ஆராய்ச்சியாக இருக்கிறது, இந்த ஆராய்ச்சி இன்னும் முழுமடையவில்லை என்றாலும் ஆரம்ப முடிவுகள் தியானம் கவனக் குவிப்பைக் கூர்மையாக்குகிறது என்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது என்றும் மற்றவர்களைப் புரிந்து கொள்வதிலும், சமூக அக்கறையுடன் நடந்து கொள்வதிலும் வல்லவர்களாக மாற்றுகிறது என்றும் கூறுகின்றன. இந்த ஆராய்ச்சிகள் முடிவடையும் போது மேலும் கூடுதல் விவரங்கள் நமக்குத் தெரியவரும்.

ஓஷோ, மகரிஷி மகேஷ் யோகி, தீபக் சோப்ரா, திச் நாட் ஹான் (Thich Nhat Hanh), வேதாத்திரி மகரிஷி போன்றோர் பல தியான முறைகளை எளிமைப்படுத்தியும், பிரபலப்படுத்தியும் உலகெங்கும் பலதரப்பு மக்களைச் சென்றடையும் படி செய்துள்ளனர். aanmeegamalar.com

எல்லா வகை தியானங்களும் எல்லோருக்கும் ஏற்றதல்ல. அவரவர் தன்மைக்கு ஏற்ப சில வகை தியானங்கள் சிலருக்கு மிக எளிதாகவும், சில வகை தியானங்கள் மிக கஷ்டமானதாகவும் இருக்கலாம். அவை தியானம் செய்யும் ஆரம்ப நாட்களிலேயே தெரிந்து விடும். உங்களுக்கேற்ற ஒரு தியானத்தை ஏற்றுக் கொண்டு தொடர்ச்சியாக அதைச் செய்வது மிக முக்கியம். முதலில் ஒரு தியானம் நம் மனதில் வேரூன்ற



ஆரம்பிக்க குறைந்த பட்சம் 21 நாட்கள் அவசியம் அனுபவஸ்தர்கள் சொல்கிறார்கள். எனவே 21 நாட்களாவது தேர்ந்தெடுத்த தியானத்தை ஒரு நாள் கூட தவறாமல் செய்வது முக்கியம்.

அவரவர் தன்மைக்கும், விருப்பத்திற்கும் ஏற்ற தியான முறையை ஒவ்வொருவரும் தேர்ந்தெடுத்துச் செய்யலாம். aanmeegamalar.com

அப்படித் தேர்ந்தெடுத்த பின் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அந்த தியானம் செய்வதை பழக்கத்தில் கொண்டு வர வேண்டும். குறைந்த பட்சம் இருபது நிமிடங்களாகவாவது அந்த தியானத்தைச் செய்ய வேண்டும். அதிகாலை மற்றும் மாலை அல்லது இரவு நேரங்கள் தியானத்திற்கு உகந்தது. ஏதாவது ஓரிரு நாட்கள் தியானம்செய்வது, பின் பல காலம் தியானத்தையே மறந்திருப்பது, மறுபடியும் ஓரிரு நாட்கள் செய்வது என்பது தான் அநேகம் பேரின் அனுபவமாக இருக்கிறது. இது எந்த விதப் பெரிய பலனையும் தராது.

தொடர்ந்து தியானம் செய்பவர்களுடைய மன அமைதி அதிகரிக்கும், தேவையற்ற தீய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும், கவனத்தையும், விழிப்புணர்வையும் அதிகரிக்கும், உடல் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும் என்பதெல்லாம் ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்ட நன்மைகள் என்பதால் அனைவரும் தியானம் செய்வது அவசியம்.

## செல்வம், ஆயுள், ஆரோக்கியம் தரும்

# சனிக்கிழமை விரதம்

செல்வம், ஆயுள், ஆரோக்கியம் இவை மூன்றும் ஒரு மனிதனுக்கு மிகவும் முக்கியமானதும், அவசியமானதும்.

இவை அனைத்தும் பரிபூரணமாக கிடைக்கவேண்டுமென்றால் அவசியம் சனிக் கிழமைதோறும் விரதம் இருந்தால் இவை அனைத்தும் கிடைக்கும்.

நவகிரகங்களில் சனி பகவான் ஆனவர் மனிதர்களுக்கு நீண்ட நாள் வாழும் ஆயுள் தரும் ஆயுள் காரகனாக இருக்கிறார். எனவே சனிக்கிழமை விரதம் மேற்கொள்பவர்கள் சனீஸ்வரனின் அருள் பெற்று நீண்ட நாட்கள் வாழும் ஆயுளை வழங்குகிறார்.




மேலும் சுலபத்தில் நோய்கள் பிடிக்காத பலம் வாய்ந்த உடலையும், எந்த சூழ்நிலையிலும்குலையாத மனஉறுதியையும் கொடுக்கிறார். aanmeegamalar.com

தொழில், வியாபாரங்களில் நிலையான வருமானத்தையும், தொழில் விருத்தியும் உண்டாகும். அரசு மற்றும் தனியார் துறைகளில் இருப்பவர்களுக்கு உயர்பதவிகள் கிடைக்க பெறுவார்கள். எதிரிகளால் வெல்ல முடியாத நிலையும் உண்டாகும்.

# சொர்க்கம், மோட்சம்
## ஆகிய இரண்டும் முற்றிலும் வேறுவேறானவை

e-magazine

aanmeegamalar.com

நாம் ஒரு பிறவியில் செய்யும் பாவபுண்ணியங்களின் அடிப்படையில் ஒருவரின் அடுத்த பிறவி நிர்ணயிக்கப்படுகிறது.

ஒருவர் அரசனாக இருப்பதும் ஏழையாக, கோழையாக, நோயாளியாக இருப்பதும் துன்பங்களை அனுபவிப்பதும் அவரவரின் கர்ம வினைகளாலேயே ஆகும்.

நற்காரியங்கள் செய்பவர் மனிதன் முதலான உயர்பிறவியில் பிறந்து நல்வாழ்க்கையை அனுபவிக்கிறார். தீய காரியங்களில் ஈடுபடுபவர் விலங்குகள் அல்லது கீழான நிலையில் பிறந்து அல்லல் படுகிறார். aanmeegamalar.com

மனிதப் பிறவி ஒரு உயர்ந்தப் பிறவியாகக் கருதப்படுகிறது அதற்கு காரணம், தன் செயல்களால் ஏற்படும் விளைவுகளை அறியும் மனநிலையில் மனிதன் இருக்கிறான். அத்தகைய மனிதன் மேலான புண்ணிய காரியங்களை செய்யும் போது அவன் புண்ணிய கணக்கு உயர்ந்து அனைத்து மகிழ்ச்சிகளையும் தரக் கூடிய சொர்க்க லோகத்தை மறுபிறவியில் அடைகிறான்.

ஆனால் இது நிரந்தரமானது அல்ல. அந்தப் பலன்கள் தீரும் போது அவன் மீண்டும் இவ்வுலகில் பிறக்கிறான். அதே போல பாவம் செய்து நரகத்தில் உழல்கின்றவனும் அந்தப் பலன் தீர்ந்து மறுபடி இங்கேயே பிறக்கிறான். பாவபுண்ணியங்கள் சேர்வதன் மூலம் முடிவில்லாத பிறப்புஇறப்பு என்னும் சூழலில் சிக்கித் தவிக்கிறான்.

இந்த முடிவில்லாத வட்டத்தில் இருந்து விடுபடுவதே மோட்சமாகும். ஒருவருக்கு மோட்சம் கிட்டும் போது இந்த உலக வாழ்க்கை என்னும் சங்கிலி அறுபடுகிறது. அவர் இறைவனின் அடியில் இடைவிடாது தொழும் பெரும் பேற்றைப் பெறுகிறார். நாம் அனைவரும் இந்த நிலையை அடையவே ஆசைப் படவேண்டும். இந்நிலையை அடைய முக்கியமான விதி – பாவ புண்ணியங்கள் இரண்டுமே பூஜ்யமாக இருக்க வேண்டும்.

பாவம் செய்யாமல் இருக்க முயலலாம், ஆனால் புண்ணியம் செய்யாமல் இருப்பது சரியா? என்ற கேள்வி எழுகிறது. நம் பெரியவர்கள் இதற்குகூறும் விளக்கம், ஒரு நற்செயலைஅதன் பயனை எதிர்பார்க்காமல்செய்யும் போதுஅந்த செயலுக்கான புண்ணியம் நம்மை அடைவதில்லை.

அத்தகைய எண்ணத்தோடு சுக துக்கங் களை ஒன்றாக பாவித்து இறைவனை தியானித்தோமானால் மோட்சத்தை அடையலாம்.



கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

**ஆன்மிகமலர்.காம் வழங்கும்**
**ஆன்மிகமலர் மெயில் புத்தகம்**

ஒரே கிளிக் 195 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# செய்த செயலுக்குரிய பலன்களை அனுபவித்தே ஆகவேண்டும்...

கல்வி, இளமை, பொருளாதாரம், அதிகாரம்,மரியாதை, மதிப்பு, அழகு, போன்ற எண்ணற்ற விஷயங்கள் ஒருவரிடம் இருக்கும் போது, அவருக்கு ஆன்மிக ஞானம் அவசியம் இருக்க வேண்டும். aanmeegamalar.com

மேற்கண்ட அனைத்தும் இருந்து, ஆன்மிக ஞானம் இல்லையென்றால், காலப்போக்கில், அவர்களைச் சுற்றியுள்ளவர்களின் புகழ்ச்சி வார்த் தைகளுக்கு அடிமையாகி, அனைத்தும் நிரந்தரம் என்ற எண்ணம் தோன்றிவிடும்.

இது காலப்போக்கில், தன்னை மட்டுமே உலகில் முன்னிறுத்தி சுகபோக வாழ்க்கை, அடுத்தவரை குறைத்துமதிப்பது, மற்றவர்களை தனக்கு அடிமையாக நினைத்து செயல்படுவது, மற்றவர் மனதை புண்படுத்தி இன்பம் காண்பது, போன்ற விஷயங்கள் மனிதனின் மனதிற்குள் எளிதாக புகுந்து விடும்.

ஆனாலும், எந்த செயலுக்கும் ஒரு பலன் என்பது நிச்சயம் இருந்தே தீரும்.

பாவம் செய்தால், அவர்களுக்கு தண்டனை கிடைக்காமல் இருக்கப் போவதில்லை. சில தண்டனைகள் உடனடியாகக் கிடைக்காமல் போகலாம். ஆனால் கர்மபலன் என்பது காலம் கழிந்தாவது வட்டியும் முதலுமாகக் கிடைக்கக் கூடியதே.

அது சில சமயங்களில் நம் கண்ணிற்குப் படாமல் இருக்கலாம், கருத்திற்கு எட்டாமல் இருக்கலாம்.

aanmeegamalar.com

ஆனால் வினை விதைத்தவன் வினை அறுக்காமல் போனதாக சரித்திரம் இல்லை.

ஹிந்தியில் ஒரு அழகான பழமொழி உண்டு. 'இறைவனின் பிரம்படியில் சத்தம் கேட்ப



தில்லை'. இது நூற்றுக்கு நூறு உண்மை. வெளியே தெரியாமல் தனக்குள்ளேயேபுழுங்கும்படியான எத்தனையோ வேதனைகள் உண்டு. எனவே வெளித் தோற்றத்தை வைத்து எதையும் எடை போடுவது சரியானதாக இருக்காது.

சுகர் இருப்பவன் சர்க்கரை ஆலை வைத் திருந்தாலும், ஊரே இனிப்பு சுவையை ரசிக்கும் போது, ஆலை வைத்திருப்பவன் சர்க்கரையின் சுவையை அனுபவிப்பதில்லை.

'அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்' என்ற பழமொழிக்கு ஏற்ப தவறி ழைத்தவர் தண்டனை பெறாமல் தப்புவ தில்லை என்றறிந்து தெளியும் போது காயத்தின் தீவிரம் குறையும். aanmeegamalar.com

கசப்பான அனுபவங்கள் எதுவுமே காரணம் இல்லாமல் வருவதில்லை. அவை நாம் நம் முந்தைய செயல்களால் சம்பாதித்தவையாக இருக்கலாம், நம்முடைய குறைபாடுகளால் நாம் வரவழைத்தவையாக இருக்கலாம், அல்லது நாம் புடம் போட்ட தங்கமாக மாறத் தேவையான அனுபவங்களாக இருக்கலாம்.

இதை ஒத்துக் கொள்ள நமக்கு சிறிது கஷ்டமாக இருக்கலாம். ஆனால் இது மாபெரும் உண்மை.

இதற்கு நாமே காரணம், அல்லது நம் பக்குவத்தினை அதிகப்படுத்த கிடைத்த பாடம் இது என்று உணரும் போது ஒரு அனுபவத்தின் கசப்புத் தன்மை குறைகிறது. தெளிதலும், மறந்து முன்னேறுவதும் சாத்தியமாகிறது.


aanmeegamalar.com

இந்த உண்மைகளை மனதில் இருத்திக் கொண்டு, நமது ஆறாத காயங்களின் வலியும், நமது பொருமல்களும் நம்மைக் காயப் படுத்தியவர்களை எந்த விதத்திலும் பாதித்து விடுவதில்லை. aanmeegamalar.com

மாறாக நம் மகிழ்ச்சியைத் தான் குலைத்து விடுகிறது என்பதையும் மறந்து விடாதீர்கள். உண்மையாகவே இதெல்லாம் புரியும் போது அது வரை ஆறாத காயங்களும் ஆற ஆரம்பிக்கும்.

# பலன் தரும் அபிஷேகமும் அதற்குரிய பலன்களும்

e-magazine
aanmeegamalar.com

### முக்தி கிடைக்க

இறைவனை நெய்யால் அபிஷேகம் செய்ய மனம் அமைதி பெற்று முக்தி கிடைக்க வழிவகுக்கும்.

### நீண்ட ஆயுள்

சுத்தமான பசும்பாலினால் அபிஷேகம் செய்ய ஆயுள் அதிகரிக்கும்.

aanmeegamalar.com

### குடும்ப ஒற்றுமை

குடும்ப ஒற்றுமைக்கும், குதூகலத்திற்கும் இறைவனை இளநீரினால் அபிஷேகம் செய்தால் நிச்சயம் பலன் கிடைக்கும்.

### நல்வாழ்க்கை அமைய

நல்லெண்ணெயில் அபிஷேகம் செய்ய பிரச்னை தலையெடுக்காது உங்கள் வீட்டில்.

### நினைக்கும் காரியம் நிறைவேற

சுத்தமான தண்ணீரால் அபிஷேகம் செய்ய காரிய சித்தி உண்டாகும்.

### பிணிகள் தீர

கரும்புச்சாறு அபிஷேகம் பிணிகளை அகற்றி ஆரோக்கியம் நல்கும்.

### குழந்தை பாக்யம் பெற

நல்ல பசுந்தயிரினால் அபிஷேகம் செய்ய குழந்தை பாக்யம் உண்டாகும்.


### செல்வம் சேர

பஞ்சாமிருதத்தால் அபிஷேகம் செய்ய உடல் நலம் மட்டுமல்லாமல் செல்வமும் பெருகும். அதே போல சந்தனத்தால் அபிஷேகம் செய்ய எட்டுவித செல்வங்களையும் அடையலாம்.

### பாவங்கள் கரைய

பஞ்சகவ்யத்தால் அதாவது பசுவின் ஐந்து உப உற்பத்தியான பால், நெய், தயிர், சாணம், கோமியம் சேர்த்து அபிஷேகம் செய்ய பாவங்கள் கரைய உதவும்.






# வியாபாரத்தில் தொடர் நஷ்டமா? இந்த மந்திரம் கை கொடுக்கும்

"ஸ்ரீசுக்ல மகா சுக்லே நவாங்கே ஸ்ரீமஹாலக்ஷ்மி நமோ நமஹ".

கடையில் வியாபாரமே இல்லாமல் கஷ்டப் படுபவர்கள் மற்றும் தொழில் செய்யும் யாவரும் இம்மந்திரத்தைக் கடை மற்றும் தொழில் ஸ்தாப னத்தில் அமர்ந்திருக்கும் பொழுது மனதிற்குள் ஜெபித்து வர தொழில் சிறப்பாக நடைபெறும்.

காலையில் கடை திறந்ததும் இம்மந்திரம் ஜெபித்த நீரை கடையில் தெளிக்க நல்ல பலன் கள் ஏற்படும் அல்லது மாலை 6:15 முதல் 6:45க்குள் இம்மந்திரம் ஜெபித்து நீரை கடை,தொழிற்சாலை மற்றும் வியாபார ஸ்தலங்களில் தெளித்து வர லக்ஷ்மி கடாட்சம் உண்டாகும். aanmeegamalar.com

பணம் எண்ணும்போதும், புத்தகம் அல்லது தொழில் சம்பந்தமான பைல், புத்தகம், நோட்டு களைப் புரட்டும் போதும் எச்சில் தொட்டு என்னவோ புரட்டவோ கூடாது.

குறிப்பாக ஆன்மீக நூல்களை படிக்கும் பொழுது இதைச் செய்யவே கூடாது. இது தரித் திரத்தை உண்டாக்கும்.

வெளியில் கிளம்பும் போது பர்ஸ் அல்லது சட்டைப்பையில் பணம் இல்லாமல் செல்லக்கூடாது. ஏன் என்றால் பணம் தான் பணத்தை ஈர்க்கும்.

பணப்பெட்டியில் பணம் வைக்கும் பொழுதும், வங்கியில் பணம் செலுத்தும் பொழுதும் ஸ்ரீமகாலட் சுமியை மனதார வணங்குவது பணவரவை அதிகரிக்கும். பணப்பெட்டி அழுக்கு அடையாமல் சுத்தமாகப் பராமரிக்கப்படவேண்டும்.

வெள்ளிக்கிழமை அன்று மாலை 5:30 முதல் 7:00 மணிக்குள் ஒரு செம்பில் கொஞ்சம் தண்ணீர் வைத்து சிறிது மஞ்சள் பொடி போட்டு வடக்கு முகம் நோக்கி அமர்ந்து

"ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஸ்ரீம் லக்ஷ்மி ஆகச்ச ஆகச்ச மம மந்திரே திஷ்ட்ட திஷ்ட்ட ஸ்வாஹா ||"

என்ற மந்திரம் ஜெபித்து அந்த நீரை கல்லா, பணப்பெட்டி, கடை அல்லது அலுவலக முகப்பு இவற்றில் தெளிக்கவும்.

e-magazine
aanmeegamalar.com






# ஜெயேந்திரரால் குடமுழுக்கு செய்யப்பட்ட

# ஸ்ரீ தேவி காமாட்சி கோவில், புதுடில்லி

காமாக்ஷி தேவி கோயில் என்பது சிவபெருமானின் துணைவியான பார்வதியின் அவதாரமாக நம்பப்படும் காமாக்ஷி தெய்வத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு இந்து கோவிலாகும். காமாக்ஷி தேவிக்கு அர்ப்பணிக்கப்பட்ட இரண்டு முக்கிய கோயில்கள் உள்ளன.

காஞ்சிபுரத்தில் உள்ள காமாக்ஷி கோயில் மற்றும் புதுடில்லி அருணா அசப் அலி சாலையில் அமைந்துள்ள ஒரு பிரபலமான தேவி காமாக்ஷி கோயில். இது சங்கராச்சாரியாரின் காஞ்சி காமகோடி பீடத்தின் சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்டது.

முதல் குடமுழுக்கு 16.10.1986 அன்று ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளால் நடத்திவைக்கப்பட்டது.

நவம்பர் 9, 1997 அன்று, ஸ்ரீ காஞ்சி ஆச்சாரியார்கள் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மற்றும் ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆகியோரின் தெய்வீக முன்னிலையில், ஸ்வர்ண பந்தன கும்பாபிஷேகம் நடந்தது.

மூன்றாவது கும்பாபிஷேகம் டிசம்பர் 14, 2008 அன்று ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் புனித முன்னிலையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த கோயிலின் ஒவ்வொரு கும்பாபிஷேகமும் ஸ்ரீ காஞ்சி ஆச்சார்யாள்களின் புனித முன்னிலையில் நடத்தப்பட்டது, தலைநகர் குடிமக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதமாகும்.

தெய்வம் அழகாக இருக்கிறது, கருங்கல்லால் செதுக்கப்பட்டுள்ளது. கணபதி மற்றும் ஆதிசங்கரர் திருவுருவச் சிலைகள் பிரதான கருவறையின் இடது மற்றும் வலது பக்கத்தில் உள்ளன. aanmeegamalar.com

தினமும் காலையில் அனைத்து தெய்வங்களுக்கும் அபிஷேகம் செய்யப்படுகிறது. வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மாலையில் மேரு அபிஷேகம் செய்யப்படுகிறது.

ஒவ்வொரு செவ்வாய், சனி மற்றும் ஞாயிறு தோறும் லலிதா பாராயணம் மற்றும் விஷ்ணு சஹஸ்ரநாமம் பாராயணம் நடத்தப்படுகிறது.

ஸ்ரீ ஆதிசங்கரர், ஸ்ரீ மகா ஸ்வாமிகள், ஸ்ரீ பெரிய பெரியவாள், ஸ்ரீ பெரியவாள் ஜெயந்தி தினங்களில், காலையில் ருத்ராபிஷேகம், மாலையில் உபநிஷத் பாராயணம், பாதுகை பூஜை மற்றும் பிரகார உற்சவம் நடைபெறுகிறது.

சங்கடஹர சதுர்த்தி, பௌர்ணமி பூஜை, தீப பூஜை, ஏகாதசியில் அச்சித்ர அஸ்வமேத பாராயணம், ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம பாராயணம், ஸ்ரீ விஷ்ணு சகஸ்ர பாராயணம் மற்றும் ஏகாதச ருத்ர ஜபம் பாராயணம்.

திருப்புகழ் இசை வழிபாடு, நவ சண்டி ஹோமம், விநாயகர் சதுர்த்தி, ஸ்ரீ மகா ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீ பெரிய பெரியவாள்




ஆராதனை, நவராத்திரியில் சிறப்பு ஹோமங்கள்/ அபிஷேகம் நடத்தப்படுகின்றன.

டெல்லி காமகோடி காமாக்ஷி தியானம் மற்றும் கலாச்சார மையம், தேவைப்படுபவர்களுக்கு உதவுதல், திருமணம், கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்புக்கான நிறுவனங்கள் மூலம் ஏராளமான தொண்டு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது.

கோயில் வளாகம் பெரியது மற்றும் எந்தவொரு சமூக நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஒரு பெரிய மண்டபத்தையும் (காஞ்சி காமகோடி பவனம்) கொண்டுள்ளது. கோயில் வளாகத்தின் நுழைவாயிலில் அனைத்து பூஜை பொருட்களும் கிடைக்கின்றன. aanmeegamalar.com



அன்னை காமாட்சியின் அருளால் பக்தர்கள் நல முடன் இருக்கும் அதே வேளையில், பக்தர்களின் நேர்மையான பக்தியால்அன்னை பிரகாசிக்கிறார் என்பது உறுதியாக நம்பப்படுகிறது. அவர்கள் அனைவரின் மீதும் ஸ்ரீ தேவிகாமா க்ஷியின் அருளையும் ஆசீர்வாதங் களையும் பொழிய பிரார்த்திக்கிறோம்.

எப்படி செல்வது

முனிர்கா மெட்ரோ நிலையத்தில் இருந்து 3 கி.மீ. தொலைவில் ஆல யம் உள்ளது, சங்கடஹர சதுர்த்தி, பௌர்ணமி பூஜை, தீப பூஜை, ஏகாதசி யில் அச்சித்ர அஸ்வமேத பாராயணம், ஸ்ரீ மகா ஸ்வாமிகள், ஸ்ரீ பெரிய பெரியவாள் ஆராதனை.



கோவில் திறந்திருக்கும் நேரம் காலை 7.00 – 11.00 மணி மாலை 5.00 – 9.00 மணி

தொடர்புக்கு : 011 41802507

– டெல்லி தியாகராஜன்
9868423215

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com

# நிருபராக விருப்பமா?

ஆன்மிகம், கோவில் வரலாறு, மகான்கள், பக்தி அனுபவங்கள், சமய நிகழ்வுகள் மற்றும் ஆன்மிகக் கட்டுரைகள் எழுதும் திறன் உள்ளவரா?

**ஆன்மிகமலர்.காம்** இணையதளத்தின் வாயிலாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" வெளியீட்டிற்காக

**புதிய நிருபர்கள் மற்றும் படைப்பாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

## அனுப்ப வேண்டியவை:

- உங்கள் கட்டுரைகள் / படைப்புகள்
- ச மீபத்திய புகைப்படம்
- முகவரி சான்று நகல்
- தொடர்பு விவரங்கள்

## படைப்புகள் வரவேற்கப்படும் துறைகள்:


- ஆன்மிகக் கட்டுரைகள்
- கோவில் சிறப்புகள்
- மகான்களின் வாழ்க்கை வரலாறு
- பக்தி அனுபவங்கள்
- சமய நிகழ்வுகள்
- கவிதைகள் மற்றும் சிறுகதைகள்

**உங்கள் படைப்புகளை அனுப்புங்கள்!**
ஆன்மிக சேவையில் இணைந்து,
உங்கள் எழுத்தாற்றலை உலகறியச் செய்யுங்கள்.

**ஆன்மிகமலர்.காம்**
"ஆன்மிகத்தின் ஒளியை உலசெங்கும் பரப்புவோம்"

படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல்: aanmeegamalar@gmail.com
இணையதளம்: www.aanmeegamalar.com
தொடர்புக்கு: +91 9444228203

ஆன்மிகம் எழுதுவது ஒரு சேவை — அந்த சேவையில் நீங்களும் பங்கேற்ககலாம்!




# பிரார்த்தனையை நிறைவேற்றி தரும்

# மணிமங்கலம் பெருமாள் கோவில்

பொதுவாக பெருமாள் கோவில்களில் வலது கையில் சக்கரமும், இடது கையில் சங்கும் பெருமாள் வைத்திருப்பார். ஆனால் காஞ் சிபுரம் மவட்டம் மணிமங்கலத்தில் அமைந்துள்ள பெருமாள் கோவிலில் வலது கையில் சங்கும், இடது கையில் சக்கரமும் வைத்த கோலத்தில் அருள் பாலிப்பது மிகவும் சிறப்பாகும்.

மூலஸ்தானத்தில் நான்கு கைகளுடன்ஸ்ரீதேவி, பூதேவியுடன் ராஜகோபாலர் நின்ற கோலத்தில் பத்ம விமானத்தின் கீழ் காட்சி தருகிறார்.

இடது கையில் தண்டாயுதம் இருக்கிறது. மார் பில் மகாலட்சுமி இருக்கிறாள். இவருக் கான உற்சவர், வலது கையில் சக்கரம், இடக் கையில் சங்கு வைத்திருக்கிறார். aanmeegamalar.com

சுவாமி சன்னதியின் நுழைவு வாயிலின் மேலே, பள்ளி கொண்ட கோலத்தில் கிருஷ்ணரின் சிற்பம் இருக்கிறது. கிருஷ்ணருக்கான தலம் என்பதால், இவ்வாறு வடித்துள்ளனர். தாயார் செங்கமலவல்லி தனிச்சன்னதியில் இருக்கிறாள். ஆண்டாளுக்கும் சன்னதி உண்டு. ராமானுஜர் அவதரித்த ஸ்ரீபெரும்புதூர் தலம், இவ்வூருக்கு அருகில் இருக்கிறது. ராமானுஜர், இங்கு வந்து ராஜகோபாலரை தரிசித்துச் சென்றுள்ளதாகச் சொல்கிறார்கள். பெருமாள் சன்னதி சுற்று சுவரில் தெட்சிணாமூர்த்தி, நர்த்தன கிருஷ்ணர், நரசிம்மர், காளிங்கநர்த்தன கிருஷ்ணர் ஆகியோரின் சிற் பங்களும் வடிக்கப்பட்டிருக்கிறது.

கண்நோய் நீங்கவும், கால்நடைகள் நோயின்றி வாழவும் இங்கு அதிகளவில் வேண்டிக் கொள் கிறார்கள். aanmeegamalar.com

சுவாமியை வேண்டி பிரார்த்தனை நிறைவேறிய வர்கள், சுவாமிக்கு வஸ்திரம், துளசி மாலைஅணி வித்து, விசேஷ திருமஞ்சனம் செய்து, நெய் தீபம் ஏற்றி வழிபடுகிறார்கள்.



## ஸ்தலபெருமை

சிவன் சன்னதிகளில்தான், கோஷ்டத்தில் விநாயகர் இருப்பார். ஆனால், இக்கோயிலில் பெருமாள் சன்னதி கோஷ்டத்தில் விநாயகர் இருக்கிறார். மேலும் கோஷ்டத்தில் ஒரு கையில் தண்டம், மற்றோர் கையில் பிரயோக சக்கரத்துடன் காட்சி தரும் இரண்டு பெருமாள்களையும் தரிசிக்கலாம்.

வடக்கு கோஷ்டத்தில் வலது காலை மடக்கி அமர்ந்து, இடது கையை தரையில் ஊன்றியபடி, பிரயோகச் சக்கரத்துடன் பரமபதநாதர் காட்சி தருகிறார். இவரிடம் வேண்டிக்கொள்ளமோட்சம் கிடைக்கும் என்பது நம்பிக்கை. கால்நடைகள் நோயின்றி வாழவும், பசுக்கள் நன்கு பால் சுரக்கவும், ராஜகோபாலருக்கு துளசி மாலை அணிவித்து வேண்டிக்கொள்கிறார்கள். புரட்டாசி சனிக்கிழமை, வைகுண்ட ஏகாதசி நாட்களில் இவருக்கு விசேஷ பூஜை அலங்காரம் செய்யப்படுகிறது. aanmeegamalar.com

ராஜகோபாலர் கோயிலுக்கு எதிரே சற்றுதூரத்தில் ஆஞ்சநேயர், தனிக்கோயிலில் இருக்கிறார். இரு கைகளையும் கூப்பி வணங்கியபடி இருக்கும் இவர், கையில் கதாயுதம் இல்லாமல், "அஞ்சலி வரத ஆஞ்சநேயராக' காட்சி தருகிறார். ஆஞ்சநேயர் பிரம்மச்சாரி தெய்வம் என்பதால், இவருக்கு காவியுடையை பிரதானமாக அணிவித்து அலங்காரம் செய்யப்படுவதுசிறப்பு. ஆஞ்சநேயரின் மார்பில் ராமபிரான், எப்போதும் வாசம் செய்து கொண்டிருப்பதாக ஐதீகம். எனவே, ஆஞ்சநேயர் ராமபிரானை வணங்கும் விதமாக கைகளை மார்பில் குவித்து, இரு கட்டை விரல்களையும் மார்பில் வைத்தபடி காட்சி தருகிறார். இவரிடம் வேண்டிக்கொள்ள மன தைரியம் உண்டாகும், குரு மீதான மரியாதை அதிகரிக்கும். இவர் தவிர, கோயில் முன் மண்டபத்தில் ஒரு கல்லில் புடைப்புச் சிற்பமாக, ஆஞ்சநேயர் கையில் கதாயுதத்துடன் காட்சி தருகிறார்.

கிருஷ்ணராக அவதரித்த மகாவிஷ்ணு, குருக்ஷேத்ர போரின்போது, அர்ஜுனனுக்கு தேரோட்டியாக இருந்தார். போரில் ஆயுதங்களைபயன்படுத்தமாட்டேன் என உறுதி பூண்டிருந்த அவர், போர் அறிவிப்பிற்காக, சங்கு மட்டும் வைத்துக் கொண்டார். aanmeegamalar.com

அவரது சங்கின் ஒலியைக் கேட்டதுமே, எதிரிப்படையினர் அஞ்சி நடுங்கினர். இவ்வாறு கிருஷ்ணர் குருக்ஷேத்ர போரின்போது, வலது கையில் சங்கு வைத்து ஊதியதன் அடிப்படையில் இங்கு மகாவிஷ்ணு, வலது கையில் சங்கு வைத்தபடி காட்சி தருகிறார். வலது கையில் இருக்க வேண்டிய சக்கரம், இடது கையில் இருக்கிறது. கிருஷ்ணாவதாரத்தில் இடையனாக இருந்து, பசுக்களை மேய்த்ததால் இவர், "ராஜகோபாலர்' என்று பெயர் பெற்றார்.

பொதுவாக வலது கையில் சக்கரமும், இடது கையில் சங்கும் பெருமாள் வைத்திருப்பார். ஆனால் இத்தலத்தில் வலது கையில் சங்கும், இடது கையில் சக்கரமும் வைத்த கோலத்தில் அருள் பாலிப்பது மிகவும் சிறப்பாகும்.


தொடர்பு எண்:
+91 98413 63991.



# உலகப் புகழ்பெற்ற நாத்திகர்கள்

# மரணப் படுக்கையில்

# என்ன சொன்னார்கள் தெரியுமா..?




கடவுள் இல்லை... இல்லை என்று கூறிய பலர், தங்கள் உடலில் இரத்தத்தின் சூடு குறையும் போது கடவுளை நாடியிருப்பதை பலர் கண் கூடாக பார்த்திருப்போம். அந்த வழியில் ஒருசில பிரபல நாத்திகர்கள் பற்றி பார்ப்போம்...


### வால்டேர் என்பவர் புகழ்பெற்ற பிரெஞ்சு நாத்திக எழுத்தாளர்.

பிரெஞ்சு புரட்சிக்காக பெரும் பங்காற்றியவர், மதம் வேறு, அரசியல் வேறு என்ற கருத்தில் உறுதியாக நின்றவர். மரணப் படுக்கையில் தனது மருத்துவரிடம் கூறியதாவது:

'ஆண்டவனும் என்னை கைவிட்டுவிட்டான். மக்களும் என்னை புறக்கணித்து விட்டனர். ஆறு மாதங்களுக்கு என் உயிரை தக்க வைத்து தாருங்கள்! என் பாதி சொத்தை தருகிறேன். நான் இறக்கப்போகிறேன், நான் நரகத்தை கண் முன் காண்கிறேன்'. aanmeegamalar.com

### ஆங்கிலேய நாத்திகர் சர் தாமஸ் மரணப்படுக்கையில் கூறியதாவது:

'இவ்வளவு காலமாக நான் கடவுளை நம்பவில்லை, நரகத்தையும் நம்பவில்லை. ஆனால் இப்போது நான் கடவுள் இருப்பதாக உணர்கிறேன், இப்போது நான் நரகத்தின் விளிம்பில் இருப்தாக உணர்கிறேன்.'


ஆன்மிகமலர்.காம்
இலவச
ஆன்மிக இ-புத்தகங்கள்!
ஆன்மிக விஷயங்களை, கோவில்கள்
வரலாற்றை, பாரம்பரிய வழிபாட்டு
முறைகளை, முன்னோர்களின் வழஙகள
மிக எளிமையாக புரிந்து கொள்ளும்,
இ-புத்தகம் வடிவில் மாதம் இரண்டு
இதழ்களை வெளியிட்டுவருகிறது.
இதுவரை வெளிவந்த
195 க்கும் மேற்பட்ட இதழ்களை
எந்தவித கட்டணமும் இன்றி
இலவசமாக படித்து மகிழ
195+
இதழ்கள்
இலவசம்
aanmeegamalar.com இணையதளத்தில்
இபுத்தகம் பகுயில் படித்து மகிழுங்கள்.

## சார்ச் ஆ.்.ப் என்பவர் மரணப்படுக்கையில் கூறியதாவது:

'நான் மகா பாதக செயலை செய்துவிட்டேன். ஆண்டவன் என்னை மன்னிக்காவிட்டால் நான் நாசமானவர்களில் ஒருவன் என்பதில் ஐய மில்லை'.

## பல்லாயிரக்கணக்கானவர்களை கொன்று குவித்த பிரான்சு மன்னர் ஏழாம் சார்லஸ்:

'நான் கொன்றவர்கள் என் கண் முன்னால் வந்து செல்கின்றனர். என் கெட்ட முடிவை நான் காண்கிறேன்'.

## தத்துவஞானி தாமஸ்:

'நான் இருண்ட பாதளத்தில் குதிக்கப் போகி றேன், இந்த நேரத்தில் இந்த உலகம் என் கை வசம் இருந்தால், ஒரு நாள் மாத்திரம் உயிர் வாழ அதை கொடுப்பேன்'. aanmeegamalar.com

## நாத்திக எழுத்தாளர் மாஸ் பெய்ன் கூறும்போது:

'எனக்கு இந்த உலகமும் அது போன்றதும் இருந்தால், நான் அதை கொடுத்து இந்தவேதனை யில் இருந்து தப்பிப்பேன். என்னை தனியே விடாதீர்கள்! நான் நரக விளிம்பில் இருக்கிறேன். சைத்தானின் நண்பனாக நான் இருந்தேன்'.

## ஸ்கட்லாந்து நாத்திகரும் வரலாற்றாசிரியருமான டேவிட் ஹியூம்:

'என்னை காப்பாற்றுங்கள்! நரக நெருப்பு என்னை சுடுகிறது.'

அவரை பார்த்தவர்கள் அவர் மிகவும் பரிதாபப் படும் நிலையில் இருந்ததாக கூறியுள்ளனர்.

## பிரெஞ்சு பேரரசர் நெப்போலியன் போனபார்டே உலகை ஆளும் வெறியில் மில்லியன் கணக்கானவர்களைக் கொன்றார். மரணபடுக்கையில் அவர் கூறியதாவது:

'என் நேரம் வர முன்பே நான் சாகப்போகிறேன். மண்ணோடு மண்ணாகப் போகிறேன். நான்தான் மிகப்பெரிய பேரரசரன், நான் விழும் நரக பாத ளத்துக்கும் சொர்க்க சோலைகளுக்கும் பெரும் தூரம் உள்ளது'.

## அமெரிக்க பத்திரிகையான நியூ ஸ்வீக்கிற்கு ரஷ்ய சர்வாதிகாரி ஜோசப் ஸ்டாலினின் மகள் ஸ்வெட்லானா ஸ்டாலின், அவரது மரணம் பற்றி வர்ணிக்கும் போது:

'என் தந்தையின் மரணம் ஒரு பயங்கரமாக இருந்தது. அவர் திடீரென்று கண்களைத் திறந்து பார்ப் பார், வெறித்தனமாக கோபமடைவார், மேலே பார்ப்பார், தனது இடது கையால் மேலே ஏதோஒன்று இருப்பதாக சைகை செய்வார். ஏதோஒன்று இருப்பதாக எச்சரித்துவிட்டு மரணித்தார்". aanmeegamalar.com

## டியூக் செசரே போர்கியா என்பவர் 'இளவரசன்' என்ற நாவலில் ஆசிரியர். அவர் தனது மரண அவஸ்தையில் சொன்னதாவது:

"எதனையும் முகம் கொடுக்க தயாராக இருந்தேனே!, இப்போது இந்த மரணத்துக்கு முகம் கொடுக்க தயாராக இல்லையே".

சார் பிரான்சிஸ் நியூபெர்ட் என்பவர். பிரிட்டிஷ் நாத்திகர்கள் சங்கத் தலைவர். அவர் இறக்கும் போது படுக்கையைச் சுற்றி இருந்தவர்களிடம் இப்படி கூறினார்:

"கடவுள் இல்லை என்று என்னிடம் சொல் லாதீர்கள், நான் இப்போது அவன் முன்னி லையில் இருக்கிறேன். நரகம் இல்லை என்று சொல்லாதீர்கள், நான் இப்போது அதன் பாதாளத்தில் தொலைந்து விழுவதாக உணர்கி றேன்.

உங்கள் பேச்சை உங்களோடு வைத்துக் கொள்ளுங்கள். கோடி வருடங்கள் கடந்தாலும் அதன் வேதனையில் இருந்து எனக்கு விடுதலை இல்லை! ஐயோ சுட்டெரிக்கும் நரகமே!".

## டேவிட் ஸ்ட்ராஸ் என்பவர் 1874 இல் இறந்த ஜெர்மன் நாத்திக எழுத்தாளர். அவர் தனது மரணப்படுக்கையில் கூறினார்:

"என் தத்துவங்கள் என்னைத் கைவிட்டு விட்டதே! நான் இப்போது கோரப்பட்களைக் கொண்ட ஒரு ராட்சத இயந்திரத்தின் தாடையில் அகப்பட்டதாக உணர்கிறேன். அது எந்த நேரத்தில் என்னை அரைத்து நசுக்கும் என்று தெரியவில்லை".

இதுவரை வெளிவந்த

# 200 க்கும் மேற்பட்ட இதழ்களை

eBook DOWNLOAD

free

**aanmeegamalar.com**

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்

Scan to Read
aanmeegamalar
e-book





# மகாலட்சுமி வழிபட்ட சிவபெருமான்

# இரண்டு நாய்களுடன் காட்சி தரும் பைரவர்

# திரு நோக்கிய அழகியநாதர்

திருப்பாச்சேத்தல் அமைந்திருப்பது, திரு நோக்கிய அழகியநாதர் திருக்கோவில்,இக்கோ விலின் மூலவராக திருநோக்கிய அழகியநாதர் உள்ளார். இறைவி மருநோக் கும் பூங்குழலி ஆவார். கோவிலின் தல விருட்சம் பாரிஜாதம், தல தீர்த்தமாக லட்சுமி தீர்த்தம் உள்ளது.

## தல வரலாறு

1300 ஆண்டு பழமையான இந்தகோவில் நளச்சக்கரவர்த்தியால் கட்டப் பட்டு பூஜிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. இத்தலம் முன்னர் ‘வடுகநாதபுரம்‘ என்றும், துர்வாச முனிவரும், நளச்சக்கரவர்த்தியும் வழிபட்டதால் ‘உன்னத புரி’ என்றும் அழைக்கப்பட்டது. aanmeegamalar.com

திருஞான சம்பந்தர் சமணர்களுக்கு எதி ராக அனல்வாதம், புனல் வாதம் செய்தார். (அனல் வாதம் என்பது ஏடுகளை நெருப்பில் போட்டு, யாருடைய ஏடு நெருப்பில் எரியாமல்





இருக்கிறது என்று நிரூபிக்கும் போட்டியாகும். புனல்வாதம் என்பது ஓடும் நதியில் ஏடு களை போட்டு யாருடைய ஏடு மூழ்காமல் மிதக்கிறது என்பதை நடராஜர் திருநோக்கிய அழகிய நாதர் நிரூபிக்கும் போட்டியாகும்.)

புனல்வாதத்தின் போது திருமுறைகள்வைகை ஆற்றில் விடப்பட்டது. அப்போதுஅவை நீர்போக் கினை எதிர்த்து சேர்ந்த இடம் 'திரு ஏடகம்' என்றும், அழகிய பாக்கள் அதாவது பாடல்கள் வந்து சேர்ந்த இடம் என்பதால் 'திருப் பா சேர்த்தி' என்றும் அழைக்கப்பட்டது. பின்மருவி 'திருப் பாச்சேத்தி' என்று அழைக் கப்பட்டு, தற்போது 'திருப்பாச்சி' என்று அழைக் கப்படுகிறது.

ஜலந்திரன் என்ற அரக்கன் முனிவர் களுக் கும், தேவர்களுக்கும் மிகவும் தொந்தரவு கொடுத்து வந் தான். இதை தேவர்கள் திருமாலிடம் தெரி வித்தனர். ஜலந்திரனை அழிக்க வேண்டுமானால் அவனது மனைவி பிருந்தையின் பதிவிரதத்தை முதலில் அழிக்க வேண்டும் என்பதை திருமால் உணர்ந்தார். (பிருந்தை என்றால் துளசி என்று பொருள்). திருமாலே ஜலந்திரன் உருவெடுத்து பிருந்தையிடம் சென்றார். வந்திருப்பது திருமால் என்ப தையும், தனது பதி விரதத்தை சோதிக்க அவர் வந்திருப்பதையும் அறிந்த பிருந்தை தீயில் புகுந்து உயிரை விட்டாள்.

பிருந்தை இறந்தவுடனேயே ஜலந் திரன் தன் வலி மையை இழந்தான். இதனை உணர்ந்த சிவன் பூமியில் ஒரு வட்டத்தை வரைந்து அதை ஜலந்திரனிடம் எடுக்க கூறினார். வலி மையில்லாத ஜலந்திரன் அந்த வட்டத்தை தூக்கிய போது அது மாபெரும் சக்கரமாக மாறி அவனை அழித்து விட்டது. இதன் பின் பிருந்தையின் இறப்பை எண்ணி மிகவும் வருந்திய திருமால் பிருந்தையின் சாம்பலில் கலந்தார். இதனால் வைகுண்டம் இருண்டது. திருமகள் வருந்தினாள்.

இதனை அறிந்த பார்வதி, மகாலட்சுமிடம், "பூமியில் திருப்பாச்சேத்தி எனப்படும் உன்னத புரியில் தங்கி, பாரிஜாத வனத்தில் சுயம்பு மூர்த்தியாக வீற்றிருக்கும் புற்றிடங் கொண் டாரை சிவ தீர்த்தத்தால் வழிபட்டால் உன் கணவனை அடையலாம்" என்றார். திரு மகளும் திருப்பாச்சேத்தியில் ஒரு மண்டலம் தங்கியிருந்து அப்படியே செய்ய சிவன் மகிழ்ந்து திருமகளுக்கும், திருமாலுக்கும் காட்சி தந்தார். பின் இருவரும் அருகிலுள்ள வைகை ஆற் றுக்குச் சென்று நீராடி சிவனை பூஜை செய்து வழிபட்டனர். aanmeegamalar.com

சிவன் சில விதைகளை திருமாலிடம் கொடுத்து பிருந்தையின் சாம்பலில் தூவ சொன்னார். அதன் படியே செய்ய அதிலிருந்து துளசி தோன்றியது. திரு மால் அந்த துளசியை எடுத்து சிவனை அர்ச்சித்து விட்டு மீதியை மாலையாக்கி கழுத்தில் அணிந்து கொண்டார். இந்த நிகழ்வு நடைபெற்றது ஒரு சோம வார நாளில் தான். எனவே இன்றைக்கும் இந்த சிவாலயத்தில் சோமவாரமான திங்கட்கிழமை தோறும் சிவனுக்கு துளசியால் அர்ச்சனை செய் யப்படுகிறது.

## கோவில் அமைப்பு

பொதுவாக சிவன் கோவில்களில் பைரவர், ஒரு நாய் வாகனத்துடன் தான் காட்சிஅளிப் பார். ஆனால் இக் கோவிலில், பைரவர் இரண்டு நாய் வாகனங்களுடன் அருள் பாலிக்கிறார். இப்படி இரட்டைநாய் வாகனங்களுடன்பைரவர் எழுந் தருளி இருப்பது ஒரு அரிய காட்சி யாகும். aanmeegamalar.com

இவருக்கு 'கஷ்ட நிவாரண பைரவர்' என்று பெயர். தோல் நோய், வயிற்று நோய், வாத நோய்,



அழகுராஜா

பித்த நோய், இருதய நோய் முதலிய நோய்களை நீக்குபவராக உள்ளதால், இவருக்கு இந்த பெயர் ஏற்பட்டது.

இக்கோவிலில் எழுந்தருளி இருக்கும் நடராஜர் 'இசைக் கல் நடராஜர் என்றுஅழைக் கப்படு கிறார். இவரது திருமேனியை தட்டி னால், இசை ஒலி எழும்பும் என்பது தனிச் சிறப்பாகும். கோவிலில் மரகதத்தால் ஆன லிங்கமும் உள்ளது.

சிவன் கோவி லில் பெரும்பாலும் வில்வ மலர் கொண்டு அர்ச் சனை செய்யப்படும். ஆனால் இக் கோவிலில் துளசியைக் கொண்டு அர்ச்சனை செய்யப்படுவது தனிச் சிறப்பு ஆகும்.



## கோவில் சிறப்பு

திருமண வாழ்வில் கசப்புணர்வுஏற் பட்டு கணவன் மனைவியிடையே கருத்து வேறு பாடு ஏற்படின் அழகிய நாதரை வழிபட்டால் அவர்கள் வாழ்வில் துன்பம் தொலைந்து இனிமை கூடும். பிரிந்தவர்கள் ஒன்று சேர்ந்து விடுவார்கள்.

அவர்களுக்குள் அன்னியத்தன் மை மறைந்து நெருக்கம் அதிகரிக் கும். அதிகரிக்கும். நளமகாராஜன் மகா இத்தல இறை வனை வழிபட்டு பிரிந்த மனைவி, குழந்தையை அடைந் தான். மகாலட்சுமியே வழிபட்ட தலம் ஆதலால் இங்கு வந்து வழிபடுபவர்களுக்கு திருமணம் கை கூடும். செல்வம் பெருகும். குழந்தைப்பேறு கிடைக்க வேண்டு பவர் களும், சனி தோஷம் நிவர்த்தி, கலி தோஷ நிவர்த்தி, பிரம்மகத்தி தோஷ நிவர்த்தி அடைய வேண்டுபவர்களும் இத்தலம் வந்து தரிசனம் செய்தால் சிறந்த பலன் கிடைக்கும்.

தங்கள் வேண்டுதல் நிறைவேறிய பக்தர்கள் இங்கு இறைவனுக்கு அபிஷேகம் செய்து, தங்களால் இயன்ற பொருள் உதவி, அன்ன தானம் செய்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

மகா சிவராத்திரி, மார்கழி திருவா திரை, சோமவாரம் உள்ளிட்ட பல விழாக்கள் இந்தக் கோவி லில் சிறப்பாக நடைபெறுகின்றன.

## கும்பாபிஷேகம்

திருப்பாச்சேத்தி மருநோக்கும் பூங்குழலி அம்மன் சமேத ஸ்ரீ திருநோக்கிய அழகியநாதர் இக்கோவிலில் பிரசித்தி பெற்ற இரண்டு நாய் வாகனத்துடன் காட்சி தரும்அருள்மிகு கஷ்ட நிவாரண பைரவர் திருக் கோவில் மற்றும் விநாயகர் சுப்பிர மணியர் மற்றும் பரிவார சன்னதிகள் திருப்பணிகள் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் விழா 2026 ஜூன் 24 ந்தேதி புதன் கிழமை காலை 6.50 மணியில் இருந்து 7.25 மணிக்குள் நடைபெற்றது.

சிறப்பு யாக சாலை பூஜைகளை பிள்ளையார் பட்டி ஸ்தானிகர் சிவ ஸ்ரீ பிச்சை குருக்கள், பெரிய கோட்டை சிவ ஸ்ரீ மீனாட்சி சுந்தர குருக்கள் தலைமையில் சிவாச்சாரியார்கள் செய்து வருகின்றனர்.

கோவில் திருப்பணி வேலைகளை மானா மதுரையில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில் ஸ்தபதி சண்முகம் செய்தார். aanmeegamalar.com

மகா கும்பாபிஷேகம் விழா ஏற்பாடுகளை அருள்மிகு ஸ்ரீ மருநோக்கும் பூங்குழலி அம்மன் சமேத ஸ்ரீ திருநோக்கிய அழகியநாதர் திருக் கோவில் திருப்பணி குழுவினர், கோவில் திருவாசக குழுவினர் மற்றும் திருப்பாச்சேத்தி கிராம பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

கோவில் தினமும் காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரையும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையும் பக்தர்கள் தரிசனம் செய்வதற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கும்

மதுரையில் இருந்து ராமேஸ்வரம் செல்லும் நான்கு சாலை யில் 34 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது, திருப்பாச் சேத்தி. மதுரையில் இருந்து மானாமதுரை, பரமக்குடி, ராமநாதபுரம், ராமேஸ்வரம் செல்லும் பேருந்துகள் அனைத்தும் இந்த ஊரில் நிற்கும். திருப்பாச்சேத்தி பேருந்து நிலையம் அருகிலேயே இந்த கோவில் அமைந் துள்ளது.

மதுரை மத்திய பேருந்து நிலையத் திலிருந்தும்,மாட்டுத் தாவணி பஸ் நிலையத்தில் இருந்து அடிக்கடி பஸ் வசதி உள்ளது. மதுரை ராமேஸ்வரம் பயணிகள் ரயிலும் திருப்பாச்சேத்தி ரயில் நிலையத்தில் நின்று செல்கிறது.

ஆலய தொடர்புக்கு
**8825713149, 7200088890**

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

e-magazine
aanmeegamalar.com

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!

மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்

ஒரே கிளிக் 200 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# தெய்வம் எதற்காக என்று புரிவதற்கு தோன்றியதே மதம்

சீடன்: சுகம் அடைய கஷ்டப்பட வேண்டுமா?

ஞானி: சுகத்தை அனுபவிக்கும் மனிதன் கஷ்டப்படுகிறான்; ஆனால் அது மறைக்கப்படுவதால் தெரிவதில்லை.

சீடன்: இது ஏன் அனைவருக்கும் தெரிவதில்லை?

ஞானி: பேரறிவு கொண்ட மனிதர்களாக இருந்தாலும் சிற்றறிவு கொண்ட மனிதர்களாக வாழ்வதால்.

சீடன்: இறைவன் ஏன் அவ்வளவு முக்கிய மானவன் ஆனான்?

ஞானி: ஆத்மாவின் தலைவனான இறைவன் ஆத்மாவுக்கு துணையாக உள்ள உற்ற நண்பன், அதனால் ஆத்மாவிற்கு மாத்திரம் ஆரோக்கியத்தைத் தருபவனல்ல கடவுள். உடல், பொருள், ஆவி அனைத்துக்கும் காப்பு அவனே.

சீடன்: மனிதன் அவ்வளவு முக்கியமாக முடியாதா?

ஞானி: மலமில்லாத மனிதன் இருந்தால் அவனே கடவுளாவான்.

சீடன்: பின் ஏன் மனிதன் பயப்படுகிறான்?

ஞானி: மனிதனுடைய பலம் உலகத்திலுள்ள எந்த பொருட்களிலும் இல்லை, கடவுளை மறுத்ததினால் தான் சூழ்நிலை பயம் அவனுக்கு ஏற்படுகிறது,

சீடன்: சூழ்நிலை பயத்தினால் தான் கடவுளை நினைக்க முடியவில்லை?

ஞானி: சூழ்நிலை பயத்தினால் பாதிக்கப்பட்ட நீ உப்பு, புளி, மனைவி, குடும்பத்தை மறக்கவில்லையே. கடவுளை மாத்திரம் ஏன் மறந்தாய்?

சீடன்: மறக்கவில்லையே, பூஜைகள் செய்துகொண்டு இருக்கிறோமே?

ஞானி: பக்தர்களின் உள்ளம் தான் ஆண்டவனுக்கு, நினைக்காத உன் பூஜை, அபிஷேகம், கோயில் எல்லாம் செயற்கை.

சீடன்: எதைப் பார்த்தாலும் சந்தேகம் வருகிறதே?

ஞானி: எந்த மார்க்கத்திற்குப் போவதற்கு முன்னாலும் மனிதனுக்கு வருவது சந்தேகமே. அதை தீர்த்து வைப்பதே அறிவு.

aanmeegamalar.com

சீடன்: விருப்பம் எப்பொழுது வரும்?

ஞானி: கடவுள் வேண்டும் என்ற அபிப்பிராயம் வந்தால்.

சீடன்: விருப்பம் எப்பொழுது வராது?

ஞானி: பக்தி தேவை இல்லை என்று எண்ணும் போது.

சீடன்: கருத்துக்களை எப்படி வாங்கிக் கொள்ள வேண்டும்?

ஞானி: எந்தக் கருத்தையும் உடனே தலையில் வைக்காதே. காதால் நன்றாகக் கேட்டுக் கொள். புரிந்து கொள்ளாமல் தலையில் போட்டால் வெறி பிடிக்கும். தெரு நாயாக இருந்தாலும் விட்டு நாயாக இருந்தாலும் கடித்தால் ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்.

சீடன்: கடவுளும் மதமும் எதற்கு?

ஞானி: கையில் அரிசியை வைத்து சமைத்துப் போட முடியாது என்பதால் பானை தேவைப்பட்டது. மனம் தானாக அமைதி யடையாது என்பதால் கடவுளும் மதமும் தேவைப்படுகிறது. உலக விஷயங்களால் கெடக் கூடாது என்பதால் கடவுளை உள்ளே நுழைத்தார்கள்.



சீடன்: உருமுள்ள கடவுள் தேவை யா?

ஞானி: அது உன் மன நிலையைப் பொறுத்தது. உலகம் விரிவடை வதற்குத் தக்கபடி கடவுள்

e-magazine
aanmeegamalar.com

தன் உருவத்தை மாற்றிக் கொள்கிறான்.

சீடன்: முடிவு எடுப்பது எப்படி?

ஞானி: படிப்பதற்கு முன்னால் முடிவு செய்யாதே. படித்து அறிந்து முடிவு எடுப்பவன் பாதியில் ஓடிவிடுவான்.

சீடன்: ஞானிகளின், மகான்களின் உலக, தேக விஷயங்கள்?

ஞானி: விட்டவர்களுக்கு தான் கடவுளின் விளையாட்டு புரியும். ஞானி களின் தேக, உலக அபிமானத்தை ஆண்டவன் ஏற்கிறான்.

சீடன்: இது சராசரி மனிதனுக்கு வருவதில்லை, வரப் போவதுமில்லை?

ஞானி: அப்படிச் சொல்லாதே. வராததால் நாம் பாபிகள் என்று அர்த்தமில்லை. புண்ணியத்தை சேர்க்கத் துவங்கவில்லை அவ்வளவுதான்.

சீடன்: எங்களை உற்சாகப்படுத்த எளிமையாக்குகிறீர்கள்?

ஞானி: அப்படியல்ல. உங்களில் அநேகம் பேருக்கு ஆசை இருக்கிறது. அது அனுபவமாகும்போது அது சரி ஆகிவிடும். அதற்கு பக்தி செய்யத் தொடங்கு.

சீடன்: மந்திரம் என்றால் என்ன? aanmeegamalar.com

ஞானி: உருவத்தை எடுத்துக் காட்டும் சொல்லே மந்திரம்.

சீடன்: அது ஏன் முக்கியமானது?

ஞானி: பெரிய வியாக்கியானங்கள் மனதை மாற்றாத நிலையில் சிறிய நாமாக்களை இராமா, முருகா என்பதே மனதை மாற்றுவதால் அவை முக்கியம்.

சீடன்: இந்த மந்திரம் தான் நமக்கு என்று எப்படி தெளிவாகும்?

ஞானி: ஏதாவதொரு சொல் தான் சீடனுக்கு மந்திரம் என்பதால் ஞானிகளின் ஆயிரக்கணக்கான வார்த்தைகளைக் கேட்க வேண்டும் சீடன்.

சீடன்: மந்திரத்தின் அர்த்தம் விளங்க வேண்டாமா?

ஞானி: பக்தியுடன் பார்த்தால் ஒரு சொல்லுக்கு நூறு அர்த்தங்கள் புரிந்து இலக்கணமே இலக்கியம் ஆகிறது.

சீடன்: மந்திரங்களின் உயர்வு என்ன?

ஞானி: அனுபவம் இல்லாமல் மந்திரத்தை சொல்வதனால் பலனும் கிடைப்பதில்லை, சலிப்பும் ஏற்படுகிறது.

சீடன்: புராணங்களின் உபயோகம் என்ன?

ஞானி: இராமாயணமும், சிவபுராணமும் அறிவைத் தருகிறது. இராமா, சிவா என்ற மந்திரங்கள் தான் நம்மை மாற்றி ஞானத்தைத் தருகிறது.

ஞானச்சேரி ஞானிகள்

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு

எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல்

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203



நீங்களும்
பத்திரிகையாளர்
ஆகலாம்....!!!
உங்கள் செய்தி...
உலகம் அறிய...
PRESS
NEWS
தினசரி நாளிதழ், வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
குறைந்த செலவில்
தரமாக வடிவமைத்து தருகிறோம்...
தினசரி காலை
புதிய திட்டங்கள்
மக்கள் நலனுக்கு
வாரமலர்
மாத இதழ்
குறைந்த
செலவில்
தரம்
உறுதி!
முன்னணி பத்திரிகையாளர்கள்
செய்திகள், கட்டுரைகள்,
கார்ட்டூன்களை,
அதிகாரப்பூர்வமாக பயன்படுத்தி,
உலகத் தரத்திலான
வடிவமைப்பில் நாளிதழ்ககளை
தயாரித்து தருகிறோம்...
e-book, e-paper,
printing பயன்பாட்டிற்கு ஏற்ப
நேர்த்தியாகவும், அழகாகவும்
தயாரித்து தருகிறோம்.
மேலும் விபரங்களுக்கு
9444228203
என்ற வாட்சப் எண்ணிற்கு
மெசேஜ் மட்டும் அனுப்பவும்...
இமெயில் முகவரி
bhaanrajagraphics@gmail.com
தொழில்முறை
செய்திவமைப்பு
அழகான
வடிவமைப்பு
தரமான
அச்சு
நேர்த்தியான
விநியோகம்
முழுமையான
ஆதரவு
உங்கள் செய்தி... உங்கள் குரல்... உலகம் முழுவதும் சேரட்டும்!




aanmeegamalar.com e-magazine